செ.வெ.எண்-05 நாள்-02.09.2021

**அரியலூர் மாவட்டம்**

**12 ஊராட்சிகளில் 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

அரியலூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் 201 கிராம ஊராட்சிகளில் உள்ள 710 குக்கிராமங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி 100 சதவீத கொரோனா தடுப்பூசி அனைவருக்கும் போட்டு 100 சதவீதம் நிறைவு என்ற இலக்கை அடைய வேண்டி அனைத்து ஊரக பகுதிகளிலும் ஊரக வளர்ச்சி துறை மற்றும் சுகாதாரத்துறையுடன் இணைந்து தடுப்பூசி முகாம்கள் நடைபெற்று வருகிறது.

உள்ளாட்சி பிரதிநிதிகள் (ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்கள்) வட்டார அளவிலான ஊரக வளர்ச்சிதுறை அலுவலர்கள் (ஊராட்சி செயலாளர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்) மற்றும் சுகாதாரதுறை அலுவலர்கள் (வட்டார மருத்துவ அலுவலர், செவிலியர்கள் ஏனைய உதவியாளர்கள்) ஆகியோகளின் சீரிய முயற்சியால் அரியலூர் மாவட்டத்தில் ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் கவரப்பாளையம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம் மேலணிக்குழி ஆகிய இரண்டு கிராம ஊராட்சிகள் 100 சதவீத கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட கிராமங்கள் என்ற இலக்கினை ஏற்கனவே எட்டியுள்ளன. தற்போது மேலும் 10 கிராம ஊராட்சிகள் 100 சதவீத கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்ட கிராமங்கள் என்ற இலக்கினை எட்டியுள்ளன.

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் திருகளப்பூர் கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 2564 பேரில் 2502 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம் கச்சிபெருமாள் கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 1697 பேரில் 1454 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தா.பழூர் ஊராட்சி ஒன்றியம் தென்கச்சிபெருமாள்நத்தம் கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 1566 பேரில் 1537 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இடங்கன்னி கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 2265 பேரில் 2217 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திருமானூர் ஊராட்சி ஒன்றியம் விழுப்பணங்குறிச்சி கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 955 பேரில் 948 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. சுள்ளங்குடி கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 1735 பேரில் 1729 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

செந்துறை ஊராட்சி ஒன்றியம் உஞ்சினி கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 2865 பேரில் 2865 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. துளார் கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 2147 பேரில் 2140 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அரியலூர் ஊராட்சி ஒன்றியம் ஆண்டிபட்டாகாடு கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 1412 பேரில் 1355 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தவுத்தாய்குளம் கிராம ஊராட்சியில் 18-வயதிற்கு மேற்பட்டவர்கள் 799 பேரில் 785 பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய இதர நபர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பத்து கிராம ஊராட்சிகள் 100 சதவீத கொரோனா தடுப்பூசி நிறைவு செய்தமைக்கு ஊராட்சி மன்ற தலைவர் திருகளப்பூர் திருமதி.செ.புஷ்பம், ஊராட்சி மன்ற தலைவர் கச்சிபெருமாள் திருமதி.ச.ராதிகா, ஊராட்சி மன்ற தலைவர் தென்கச்சிபெருமாள்நத்தம் திருமதி.ஆ.ஆனந்தவள்ளி ஊராட்சி மன்ற தலைவர் இடங்கன்னி திருமதி.இ.ஷிலா, ஊராட்சி மன்றத லைவர் விழுப்பணங்குறிச்சி திரு.அ.கருப்பையன், ஊராட்சி மன்ற தலைவர் சுள்ளங்குடி திரு.வே.நடராஜன், ஊராட்சி மன்ற தலைவர் உஞ்சினி திரு.பூ.முருகேசன், ஊராட்சி மன்ற தலைவர் துளார் திருமதி.ப.சுதா, ஊராட்சி மன்ற தலைவர் தவுத்தாய்குளம் திருமதி.ச.ஆனந்தநாயகி, மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் ஆண்டிபட்டாகாடு திருமதி. இ.சத்யா உட்பட ஏனைய அலுவலர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது.

இதேபோல் அனைத்து கிராம ஊராட்சிகளும் 100 சதவீதம் இலக்கினை அடைய வேண்டும் என ஊராட்சி மன்ற தலைவர் / உள்ளாட்சி பிரதிநிதிகள்சு காதாரதுறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் இதில் தங்களை ஈடுபடுத்திகொள்ளும் அனைத்து நிலை அலுவலர்களும் 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி போட்டு இலக்கை அடைவதற்கு பொதுமக்களிடையோ விழிப்புணர்வு ஏற்படுத்தி உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் பொதுமக்கள் இதற்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**